

கலைஞர் 100 1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு


# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 305 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆனி 01 – சனிக்கிழமை 15 ஜூன் 2024 – வெளியூர் 12 + 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 305 : Thiruvalluvar Year - 2055 - Aani 01 - Saturday 15 June 2024 - Dak 12+8 Pages ₹ 5.00


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.6.2024) சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் பள்ளிக்கல்வித் துறை சார்பில் நடைபெற்ற ஐம்பெரும் விழாவில், 10 மற்றும் 12–ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் 43 மாணவ, மாணவியர்கள் தமிழ்ப் பாடத்தை ஆர்வமுடன் பயின்று நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற்றதைப் பாராட்டி, தலா 10 ஆயிரம் ரூபாய் ரொக்கம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி வாழ்த்தினார். இவ்விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், பள்ளிக்கல்வித் துறை செயலாளர் ஜெ. குமரகுருபரன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி, ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாநில திட்ட இயக்குநர் மரு.மா.ஆர்த்தி, பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் க.அறிவொளி, தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் ச. கண்ணப்பன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.6.2024) சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் பள்ளிக்கல்வித் துறை சார்பில் நடைபெற்ற ஐம்பெரும் விழாவில், 10 மற்றும் 12–ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் 100 சதவிகிதம் தேர்ச்சி பெற்ற 1728 அரசுப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களைப் பாராட்டி சான்றிதழ்களை வழங்கி வாழ்த்தினார். இவ்விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் இ. பரந்தாமன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## அரசுப் பள்ளிகளில் படித்து உயர்கல்வி பயிலச் செல்லும் மாணவர்களுக்கு மாதம் ரூ. 1000 வழங்கும்

# ‘தமிழ்ப் புதல்வன்’ திட்டம் ஆகஸ்ட் மாதம் தொடங்கப்படும் !

## பள்ளிக்கல்வித்துறை சார்பில் நடைபெற்ற ‘ஐம்பெரும் விழா’வில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு !

**சென்னை, ஜூன் 15-**

**அரசுப் பள்ளிகளில் படித்து உயர்கல்வி பயிலச் செல்லும் மாணவிகளுக்கு ‘புதுமைப் பெண்’ திட்டத்தின் மூலம் மாதம் ரூ.1000 வழங்கப்பட்டு வருவதைப் போல, உயர்கல்வி பயிலச் செல்லும் மாணவர்களுக்கும் மாதம் ரூ.1000 வழங்கும் ‘தமிழ்ப் புதல்வன்’ திட்டம் ஆகஸ்ட் மாதம் தொடங்கப்படும் என்று சென்னையில் பள்ளிக் கல்வித்துறை சார்பில் நடைபெற்ற ஐம்பெரும் விழாவில் உரை யாற்றுகையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.06.2024) சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கில், பள்ளிக் கல்வித் துறை சார்பில் நடைபெற்ற ஐம்பெரும் விழாவில் ஆற்றிய உரை வருமாறு:-

பள்ளிக்கல்வித் துறை நிகழ்ச்சிகளில் பொதுவாகவே நான் ஆர்வத்துடன் கலந்து கொள்வது வழக்கம். ஆனால், என்னை விட அதிகமாக கலந்துகொள்ளும் ஒருவர் இருக்கிறார்.

**மாணவர்களைப் பார்க்கும்போது - இளமை திரும்பி ஆற்றல் வந்துவிடுகிறது!**

இந்த மேடையில் இருக்கும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி! அதனால், இந்த முறை நான் முன்பே, ரிசர்வ் செய்து விட்டேன்.

தேர்வு முடிவுகள் வந்ததும், நானே நம்முடைய அமைச்சர் மகேஸ் அவர்களுக்கு ஃபோன் செய்து, “தேர்தல் நடத்தை விதிமுறைகள் முடிந்ததும், நான் கலந்து கொள்ளும் முதல் அரசு விழாவாக, இந்தப் பாராட்டு விழாதான் இருக்கவேண்டும். அதற்கு ஏற்பாடு செய்யுங்கள்”என்று சொல்லியிருந்தேன். அதன்படி, இந்த விழாவை சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கும் தம்பி அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களையும், அவருக்குத் துணைநின்ற அதிகாரிகள், அலுவலர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் நான் இந்த நேரத்தில் பாராட்டுகிறேன். இந்த விழாவில் கலந்துகொள்வது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. இன்னும் சொல்ல வேண்டும் என்றால், பள்ளி மாணவர்களான உங்களைப் பார்க்கும்போது, எனக்கும் இளமை திரும்பி ஆற்றல் வந்துவிடுகிறது.

பொதுவாக, அரசியல் மேடைகளில் தான் ஐம்பெரும் விழாக்கள், முப்பெரும் விழாக்களை நடத்துவோம். ஆனால், இப்போது பள்ளிக்கல்வித் துறையின் சார்பில் ‘ஐம்பெரும் விழா’ ஏற்பாடு செய்திருக்கிறார் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி.

முதல் விழா, பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் 100 விழுக்காடு தேர்ச்சி பெற வைத்த அரசுப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்குப் பாராட்டு.

> **“தேர்வு முடிவுகள் வந்ததும், நானே நம்முடைய அமைச்சர் மகேஸ் அவர்களுக்கு ஃபோன்செய்து, “தேர்தல் நடத்தை விதிமுறைகள் முடிந்ததும், நான் கலந்துகொள்ளும் முதல் அரசு விழாவாக, இந்தப் பாராட்டு விழாதான் இருக்கவேண்டும். அதற்கு ஏற்பாடு செய்யுங்கள்” என்று சொல்லியிருந்தேன். அதன்படி, இந்த விழாவை சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கும் தம்பி அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களையும், அவருக்குத் துணைநின்ற அதிகாரிகள், அலுவலர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் நான் இந்த நேரத்தில் பாராட்டுகிறேன்.”**

இரண்டாவது விழா, பொதுத் தேர்வில் தமிழ்ப் பாடத்தில் 100 விழுக்காடு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்குப் பாராட்டு.

மூன்றாவது, தொடக்கக் கல்வித் துறை ஆசிரியர்களுக்கு TAB வழங்குவது.

நான்காவது, அரசுப் பள்ளிகளில் ஸ்மார்ட் வகுப்பறைகள் தொடங்குவது.

ஐந்தாவது, விளையாட்டில் தேசிய அளவில் பதக்கம் வாங்கியவர்களுக்குப் பாராட்டு.

இப்படியாக இந்த ‘ஐம்பெரும் விழா’ ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்கு முன்பு மாணவர்களுக்காக நம்முடைய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களைப் பற்றி கேட்டபோது, பள்ளிக் கல்வித் துறையில் இருந்து ஒரு பெரிய பட்டியலே வந்தது. அதில் மிக முக்கியமான சில திட்டங்களின் பெயரை மட்டும் சொல்ல வேண்டும் என்றால், 16 இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் “காலை உணவுத் திட்டம்”, 27 இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் “இல்லம் தேடிக் கல்வி”, 28 இலட்சம் மாணவர்களுக்கு திறன் பயிற்சி வழங்கி வரும் “நான் முதல்வன்”, 23 இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் “எண்ணும் எழுத்தும் திட்டம்”, 30 இலட்சம் மாணவர்கள் பயனடையும் “வாசிப்பு இயக்கம்”, “மாணவர் மனசு” என்ற பெயரில் “ஆலோசனைப் பெட்டி”, 23 இலட்சம் பெற்றோர்களை உள்ளடக்கிய “பள்ளி மேலாண்மைக் குழுக்கள்”, அரசுப் பள்ளிகளின் மேம்பாட்டுக்காக “நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி” திட்டம், “நடமாடும் அறிவியல் ஆய்வகம்”, “வானவில் மன்றம்”, மாணவர்களை நல்வழிப்படுத்தும் “சிற்பி” திட்டம், தகைசால் பள்ளிகள், மாவட்டந் தோறும் புத்தகத் திருவிழாக்கள், மாணவர்களை வெளிநாட்டுக்கு அழைத்துச் செல்லும் “கல்விச் சுற்றுலாத் திட்டம்”, பள்ளி செல்லாத பிள்ளைகளைக் கண்டறிய “செயலி”, சிறப்புக் கவனம் தேவைப் படும் குழந்தைகளுக்கு “சிறப்பு நிதி”, பயிற்சித் தாள்களுடன் கூடிய “பயிற்சிப் புத்தகங்கள்”, 9 முதல் 12ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு வினாடி-வினா போட்டிகள், கணித ஆசிரியர்களுக்கு சிறப்புப் பயிற்சி, வகுப்பறை உற்றுநோக்கு செயலி, மின் ஆசிரியர் என்ற உயர்தர டிஜிட்டல் செயலி இப்படி நிறைய இருக்கிறது.

**மாணவிகளால் பெரிதும் பாராட்டப்படும் ‘புதுமைப்பெண்’ திட்டம்!**

அதிலும் மாணவிகளுக்கு மாதா மாதம் ரூ.1000/ வழங்குகிற மற்றொரு முக்கியமான திட்டம் இருக்கிறது! அது தான் “புதுமைப்பெண் திட்டம்”. எனக்கு மாணவிகளிடம் இருந்து வந்த கடிதங்களாக இருந்தாலும், இந்தத் தேர்தல் பிரச்சாரத்தின்போது நான் சந்தித்த மாணவிகளாக இருந்தாலும், பலரும் இந்த

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

## ஜூன் 24ஆம் தேதி மக்களவை கூடுகிறது !

*புதுடெல்லி, ஜூன் 15-*

*நாடாளுமன்ற மக்களவை சபாநாயகர் தேர்தல் வருகிற 26ஆம் தேதி நடைபெறும் என அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப் பட்டுள்ளது.*

*நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. கூட்டணி 292தொகுதிகளிலும், இந்தியா கூட்டணி 234 தொகுதிகளிலும் வெற்றி பெற்றுள்ளன. புதிய உறுப்பினர்களாக தேர்வு செய்யப்பட்டவர்கள் பதவியேற்புக்காக வருகிற 24ஆம் தேதி மக்களவை கூடுகிறது. 24 மற்றும் 25 ஆம் தேதிகளில் புதிய உறுப்பினர்கள் பதவியேற்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது.*

*இந்நிலையில், மக்களவை புதிய சபாநாயகர் தேர்தல், வருகிற 26ஆம் தேதி நடைபெறும் என நாடாளுமன்ற செயலகம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இதைத்தொடர்ந்து வருகிற 27 ஆம் தேதி இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் குடியரசு தலைவர் திரவுபதி முர்மு உரையாற்றுகிறார். நாடாளுமன்ற கூட்டத்தொடர் ஜூலை 3ஆம் தேதி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.*

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரையாற்றுகிறார்!

# கோவையில் இன்று முப்பெரும் விழா !

## கூட்டணிக் கட்சித் தலைவர்கள் – கழக முன்னணியினர் பங்கேற்கின்றனர்!

**சென்னை, ஜூன் 15-**

**கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழக முப்பெரும் விழா இன்று (15ஆம் தேதி - சனிக்கிழமை) கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் மாலை 4 மணியளவில் நடைபெறுகிறது.**

**இக்கூட்டத்தில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றுகிறார். கூட்டணிக் கட்சித் தலைவர்கள் - கழக முன்னணியினர் இவ்விழாவில் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.**

இதுகுறித்து கழக பொதுச் செயலாளர் - அமைச்சர் துரை முருகன் அவர்களது அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் கடந்த சனிக் கிழமை (ஜூன் 8 ஆம் நாள்) அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற “கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றியளித்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா, சீர்மிகு வெற்றிக்கு கழகத்தை வழி நடத்திச் சென்ற தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்குப் பாராட்டு விழா என “முப்பெரும் விழா” ஏற்கனவே அறிவிக்கப்பட்ட ஜூன் 14 ஆம் தேதிக்கு பதிலாக “ஜூன் 15ஆம் தேதி மாலை 4 மணியளவில் கோயமுத்தூர் கொடிசியா மைதானத்தில்” நடைபெறுகிறது.

**கூட்டணி கட்சித் தலைவர்கள் - வெற்றி பெற்ற 40 எம்.பி.க்கள் பங்கேற்பு!**

கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் நம் கூட்டணிக் கட்சித் தலைவர்கள், வெற்றிபெற்ற நாற்பது நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்கிறார்கள்.

அனைத்துக் கழக மாவட்டங்களில் இருந்தும், மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் - கிளைக் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், வாக்குச் சாவடி முகவர்கள், கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகளை அந்தந்த மாவட்டக் கழகச் செய லாளர்கள் செவ்வனே மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.